# தமிழ்க் கிறித்தவ இலக்கியத்தில் இயற்கை

## ( *Nature in Tamil Christian Literature* )


பதிப்பாசிரியர்கள்

முனைவர் அருட்சகோ. ஜெஸின் பிரான்ஸிஸ்

முனைவர் அருள்தந்தை. சி. மணி வளன் சே. ச.



கிறித்தவ ஆய்வு மையம்
தூய வளனார் தன்னாட்சிக் கல்லூரி
திருச்சிராப்பள்ளி - 2.

தமிழாய்வுத் துறை
புனித சிலுவை தன்னாட்சிக் கல்லூரி
திருச்சிராப்பள்ளி - 2.

## நூல்விபரம்

நூலின் பெயர் : தமிழ்க் கிறித்தவ இலக்கியத்தில் இயற்கை
( Nature in Tamil Christian Literature)

பதிப்பாசிரியர்கள் : அருள்சகோ. முனைவர் **ஜெஸின் பிரான்ஸிஸ்**
அருட்தந்தை முனைவர் **சி.மணி வளன், சே.ச**

நுவல் பொருள் : ஆய்வுக் கட்டுரைகள்

பதிப்பு : முதற்பதிப்பு – ஜனவரி – 2016

மொழி : தமிழ்

உரிமை : தமிழாய்வுத்துறை
புனித சிலுவை தன்னாட்சிக் கல்லூரி
திருச்சி – 620 002

எழுத்துரு : 10.5 புள்ளி

பக்கங்கள் : xiv+338=352

அச்சிட்டோர் : தி பிரிண்டிங் ஹவுஸ்
காஜாமலை, திருச்சி – 23, போன் : 2420121

நூல் அளவு : டெம்மி

நூல் வெளியீடு : தமிழாய்வுத்துறை
புனித சிலுவை தன்னாட்சிக் கல்லூரி
திருச்சி – 620 002.

கிறித்தவ ஆய்வு மையம்
தூயவளனார் தன்னாட்சிக் கல்லூரி
திருச்சி - 620 002.

விலை : 150/-

ISBN No. : 978-93-80394-85-5

15. ஆதியாகம காவியத்தில் இயற்கை
- முனைவர் ம.பிரேமா ... 74
16. கன்னிமரி காவியத்தில் இயற்கை
- முனைவர் சி. அருள் மைக்கேல் செல்வி ... 77
17. இயற்-மானிட அறநெறிகள்
- முனைவர் ஆ.குழந்தை ... 86
18. இயேசு காவியத்தில் இயற்கை வருணனை
- முனைவர் ச. ரேணுகா ... 94
19. இரட்சணிய சரிதத்தில் இயற்கை
- முனைவர் சா. லில்லிநேசம் ... 100
20. கிறித்தவ இலக்கியங்களில் இயற்கை
- முனைவர் ஆ.ஷர்மி ... 107
21. திருக்காவலூர் கலம்பகத்தில் இயற்கை
- முனைவர் கோ.விஜயலெட்சுமி ... 111
22. தேம்பாவணியில் இயற்கை வருணனை
- திருமதி. வெ. ரா. மீனாட்சி ... 115
23. இயேசு மாகாவியத்தில் மலைகளும், மலர்களும்
- ஜோ.சகாய பவுலின் ... 122
24. கிறித்தவ இலக்கியங்களில் இயற்கை எழில்
- வே. நிர்மலர் செல்வி ... 127
25. அருள்நிறை மரியம்மை காவியத்தில் இயற்கை
- பேரா. சா. சாலமன் ... 131
26. தேம்பாவணியில் தலைமை மாந்தர்களின் வழி தண்ணீர் சித்திரிப்பு
- முனைவர். ஆ. தேவதா ... 136
27. இயேசு மாகாவியத்தில் இயற்கை
- முனைவர் தா. லதா ... 140
28. இயேசுகாவியத்தில் இயற்கைப் பதிவுகள்
- முனைவர்.இரா.பூ.இராஜேஸ்வரி ... 144
29. தேம்பாவணியில் இயற்கை
- முனைவர் க.சுஜாதா ... 153
30. தேம்பாவணியில் இயற்கை வருணனை
- ஜே. மார்க்ரெட் ... 156

# கன்னிமரி காவியத்தில் இயற்கை

**முனைவர் சி. அருள் மைக்கேல் செல்வி,**
உதவிப் பேராசிரியர்,
தமிழ் உயராய்வு மையம்,
பாத்திமா கல்லூரி (தன்னாட்சி),
மதுரை - 625 018.

நாம் வாழும் உலகம் மிக இனியது. இருசுடர்கள், ஐம்பூதங்கள், மலைகள், கடல்கள், ஆறுகள், பறவைகள், விலங்குகள், ஊர்வன மற்றும் மனிதனால் படைக்க முடியாத அனைத்து வளங்களும் நிறைந்தது. வளம் நிறைந்த இவ்வுலகம் 'நிலம், தீ, நீர், வளி, விசும்போடு ஐந்தும் கலந்த மயக்கம்' (தொல்.பொருள்.மரபு.635) என்கிறது தொல்காப்பியம். இதையே, 'மண் திணிந்த நிலனும் நிலன் ஏந்திய விசும்பும் விசும்பு தைவரு வளியும் வளித்தலைஇய தீயும் தீ முரணிய நீரும் என்றாங்கு ஐம்பெரும் பூதத்து இயற்கை'( புறம். 2) என்கிறது புறநானூறு.

இறைவன் நமக்கு வழங்கியுள்ள கொடை 'இயற்கை'. மானிடன் செயலன்றி உலகில் இயல்பாகக் காணப்படுவது இயற்கை. ஏதோ ஒரு காலத்தில் அல்லது ஒரு யுகத்தில் இயல்பாகத் தோன்றிய பொருள்களின் இயக்கமே இயற்கை என்று கூறுவோர் உளர். சமயச் சார்புடையோர் இறைவன் படைப்பு என்பர். சமயச் சார்பிலார் அது தானாகவே ஆனது என்பர். 'உலக மேனியே' இயற்கை என்பர் திறனாய்வாளர்கள். கடவுள் என்ற சிற்பியின் கலையே இயற்கை என்கிறார் பிரௌனி. இயற்கையைத் தம் ஆசான் என்கிறார் வேர்ட்ஸ்வொர்த். இயற்கையைப் படி. இயற்கையைக் காதலி. இயற்கையை நெருங்கி நில். அது என்றும் உன்னைக் கைவிடாது என்கிறார் எ.்.ப். எல். ரைட்.

தண்டியலங்காரம் கூறுகின்ற பெருங்காப்பிய இலக்கணத்தில் இடம்பெற்றுள்ள மலை, கடல், நாடு, வளநகர், பருவம், இருசுடர்த்தோற்றம், பொழில், புனல் ஆகிய அனைத்தையும் இயற்கை எனலாம். காப்பியங்களில் பொதுவாக இடம்பெறக்கூடிய இயற்கையைக் கவிஞர் தம் கருத்து வெளிப்பாட்டிற்காகப் பயன்படுத்துகின்றனர். கவிஞர் பத்திநாதன் அவர்களும் காப்பிய மரபின்படி தம் காவியத்தில் இதனைப் பயன்படுத்தியுள்ளார். **கன்னிமரி காவியத்தில்** இயற்கை புனையப்பட்டுள்ள விதம் குறித்துக் காண்பதாக இக்கட்டுரை அமைகின்றது.

## கன்னிமரி காவியம்

கவிஞர் த. பத்திநாதன் அவர்களால் எழுதப்பட்டது. நால்வர் நல்கிய நற்செய்தியின் அடிப்படையில் **மரியின் வரலாறு** எழுதப்பட்டுள்ளது.